


தேவனுடைய வார்த்தை உங்களுக்கு செய்வதென்ன?

- பகுதி 6

கண்ணாடியில் பார்ப்பதற்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா? மிகவும் கடினமான சூழ்நிலைகளில், தேவனுடைய வார்த்தை நமக்குத் தேவையான உதவியைச் செய்கிறது, ஆபத்தான நேரங்களில், நம் உயிரைக் காப்பாற்றுகிறது. தேவைப்படுகிற மாற்றங்களைச் செய்வதற்கும், வாழ்க்கைப்பாதையை சீர் செய்து ஒழுங்குபடுத்துவதற்கும் அது நமக்கு உதவுகிறது. இது தேவனுடைய வார்த்தையினால் நமக்கு உண்டாகும் நன்மையாகும். ஆனால் இந்த நன்மையை அன்றாட வாழ்க்கையில் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றால், அதற்கு சில குறிப்பிட்ட வழிமுறைகளை நாம் எப்பொழுதுமே பின்பற்ற வேண்டும். அதைக் குறித்துதான், விலையேறப்பெற்ற பொக்கிஷமாகிய இந்தக் கடிதம் பேசுகிறது.

நாம் செய்ய வேண்டிய இரண்டு முக்கியமான விஷயங்கள்

யாக்கோபு 1:21-25 வசனங்களில், நமக்குள் நடக்கின்ற தேவனுடைய வார்த்தையின் கிரியையைக் குறித்தும், அதன் பலனை நாம் எவ்வாறு பெற்றுக் கொள்கின்றோம் என்பதைக் குறித்தும் நாம் வாசிக்கின்றோம்.

ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும், கொடிய துர்க்குணத்தையும் ஒழித்து விட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும், உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தை சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள். (ஆகையால் நாம் தேவனுடைய வார்த்தையை நமக்கு இரட்சிப்பைக் கொண்டு வரக்கூடிய வல்லமையுள்ள ஒன்றாக, நம்முடைய ஆத்துமாக்களில் நாட்டப்பட்ட ஒன்றாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறதோ, அதன்படி நாம் செயல்பட வேண்டும் என்றும் யாக்கோபு நம்மை எச்சரிக்கின்றார்.) அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்கு திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும், அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான். அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம் விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்து விடுவான்.

சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப் பார்த்து, அதில் நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்.

இந்த வேதப்பகுதியில் இரண்டு கட்டளைகள் இருப்பதை நாம் தெளிவாகப் பார்க்கிறோம். தேவனுடைய வார்த்தை நம்மிடம் வரும்போது, நாம் நிறைவேற்ற வேண்டிய இரண்டு கடமைகள் இங்கிருக்கிறது: நாம் அதைத் தாழ்மையுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். அது என்ன சொல்கிறதோ, அதன்படி நாம் நடக்க வேண்டும். இந்த இரண்டு முக்கியமான விஷயங்களை வலியுறுத்திப் பேசும்போது, யாக்கோபு ஒரு கண்ணாடியை எடுத்துக்காட்டாகப் பயன்படுத்துகிறார். தேவனுடைய வார்த்தையை நாம் வாசிக்கும்போது, அதன் சத்தியங்களை நாம் எதிர்கொள்கிறோம் என்று அவர் சொல்கிறார். தேவனுடைய வார்த்தை, நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற ஒரு கண்ணாடியைப் போல இருக்கிறது. மெய்யாகவே நாம் எப்படி இருக்கிறோம் என்பதை இது நமக்குக் காண்பிக்கிறது. தேவனுடைய வார்த்தையாகிய கண்ணாடி, வெளியே நாம் பார்ப்பதற்கு எப்படி தோற்றமளிக்கிறோம் என்பதைக் காண்பிக்கவில்லை. மாறாக, இது நம்முடைய உள்ளான சுபாவத்தையும், குணாதிசியத்தையும் காண்பிக்கிறது.

எது சுத்திகரிக்கப்பட வேண்டும், எது ஒழுங்குபடுத்தப்பட வேண்டும், எது சீர்ப்படுத்தப்பட வேண்டும் என்று நம்முடைய வாழ்க்கையில் காணப்படும் தவறை வேதாகமம் நமக்குச் சுட்டிக் காண்பிக்கும்போது, நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் எடுக்க வேண்டிய மூன்று நடவடிக்கைகளை, நான் உங்களுக்கு அறிவுறுத்திச் சொல்கிறேன். முதலில், நாம் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்ள வேண்டும், அதோடு தர்க்கம் செய்யக்கூடாது. “நான் உண்மையாகவே அப்படித்தான் இருக்கிறேன். அதுதான் சரி,” என்று நாம் சொல்ல வேண்டும். இரண்டாவதாக, தேவனுடைய வாக்குத்தத்தங்களை நாம் விசுவாசிக்க வேண்டும். அவை எப்பொழுதும் அவருடைய வெளிப்பாடுகளோடு வருகின்றன. மூன்றாவதாக, விசுவாசத்தினால், அவருடைய முன்னேற்பாட்டை நாம் சுதந்தரிக்க வேண்டும்.

நீங்கள் எதைப் பார்க்கிறீர்கள் ?

இந்த மூன்று எளிமையான நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு நாம் விருப்பமுள்ளவர்களாய் இருந்தால், ஆச்சரியப்படத்தக்க ஒரு மாற்றம் நமக்குள் நிச்சயம் வரும். தேவனுடைய வார்த்தையாகிய கண்ணாடியில், கிறிஸ்து இல்லாததால், எப்படிப்பட்ட பாவநிலையில் நாம் இருக்கிறோம் என்பதை மட்டும் நாம் பார்க்கவில்லை. கிறிஸ்துவுக்குள் நாம் யார் என்பதையும் நாம் பார்க்க ஆரம்பிக்கிறோம். நமக்குள் நிகழ்ந்திருக்கிற ஆச்சரியமான, ஒரு உள்ளான உருமாற்றத்தை, தேவனுடைய வார்த்தை நமக்குக் காண்பிக்கும். அது நிகழும்போது, 2 கொரிந்தியர் 5:17-ல் சொல்லப்பட்டிருக்கிற சத்தியத்தை நாம் அனுபவிக்க ஆரம்பிப்போம்.

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புதுச் சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின!

கிறிஸ்துவுக்குள் மெய்யாகவே ஒரு புதிய நபராய் உருமாறியிருக்கும் நம்மைத்தான் நாம் இந்தக் கண்ணாடியில் பார்க்க ஆரம்பிக்கிறோம். இந்தச் சத்தியத்தின் தொடர்ச்சியாக, 2 கொரிந்தியர் 5:21-ல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

நாம் அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை (கிறிஸ்துவை) நமக்காகப் பாவமாக்கினார்.

இந்த இரண்டு வசனங்களின் விசேஷம் இதுதான். நாம் கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்த பிறகு, கண்ணாடியில் நம்மைப் பார்க்கும்போது, நாம் இனி நம்மை நம்முடைய பாவநிலையில் காண்பதில்லை. மாறாக, கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினால் நமக்கு அருளப்பட்டிருக்கிற தேவனுடைய நீதியை உடையவர்களாய் நாம் நம்மைக் காண்கிறோம். ஏசாயா 61:10, இந்தச் சத்தியத்தை வெளிப்படுத்துகிறது:

கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன்.என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது. மணவாளன் ஆபரணங்களினால் தன்னை அலங்கரித்துக் கொள்ளுகிறதற்கும், மணவாட்டி நகைகளினால் தன்னைசிங்காரித்துக் கொள்ளுகிற தற்கும் ஒப்பாக, அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்.

கிறிஸ்துவுக்குள் நாம் இருக்கும்போது, கண்ணாடியில் நாம் எப்படித் தெரிகிறோம் என்பதைத்தான் ஏசாயா இங்கு விவரித்துச் சொல்கிறான். நம்முடைய சுய நீதியின் அழுக்கான கந்தைகளை நாம் இனி பார்க்கப் போவதில்லை. நம்முடைய மிகச் சிறந்த சாதனைகளையோ, நம் புத்திசாலித்தனத்தையோ அல்லது நம் அறிவுகூர்மையையோ நாம் இனி அதில் பார்க்க மாட்டோம். மாறாக, முற்றிலும் வித்தியாசமான உடையினால் உடுத்துவிக்கப்பட்டவர்களாய் நாம் நம்மையே பார்க்கிறோம். இரட்சிப்பின் ஆடையை உடுத்திக் கொண்டவர்களாய், நீதியெனும் அங்கியை தரித்தவர்களாய் நாம் நம்மையே பார்க்கிறோம். இயேசுகிறிஸ்துவின் நீதியை உடையாக உடுத்தியவர்களாய் நாம் நம்மையே பார்க்கிறோம். தேவன் நமக்குத் தந்திருக்கிற ஆவிக்குரிய கிருபையையும், ஆவிக்குரிய அழகையும் நாம் பார்க்க ஆரம்பிக்கிறோம்.

அவருடைய மகிமையை காண்கிறோம்

சத்தியத்தின் தொடர்ச்சியாக, 2 கொரிந்தியர் 5:21-ல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

நாமெல்லாரும் திறந்த முகமாய் கர்த்தருடைய மகிமையை கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிறகர்த்தரால் அந்தச்

சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.

நம்முடைய வாழ்க்கையில் தொடர்ச்சியாய் அன்றாடம் நடந்து கொண்டிருக்கிற உருமாற்றத்தைக் குறித்து இந்த வேதப்பகுதி விளக்கிச் சொல்கிறது. பரிசுத்த ஆவியான வருக்கு இருதயத்தைத் திறந்து கொடுத்தவர்களாய், தேவனுடைய வார்த்தையாகிய கண்ணாடியை நாம் பார்க்கும் பொழுதெல்லாம், நாம் அதில் என்ன பார்க்கிறோமோ, அந்தச் சாயலாகத்தானே அதே பரிசுத்த ஆவியானவர் நம்மை மறுரூபமாக்குகிறார்.

நாம் இயேசுவை உற்றுநோக்கிப் பார்க்கிறோம். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயங்களில் கிரியை செய்கிறார். அதன் விளைவாக, அந்தக் குறிப்பிட்ட விஷயத்தில், நாம் இயேசுவைப் போல் மாறுகிறோம். பிறகு நாம் திரும்பவும் கண்ணாடியில் பார்க்கும்போது, இயேசுவின் ஒரு புதிய காட்சி நமக்குக் கிடைக்கிறது. அந்த விஷயத்திலும், பரிசுத்த ஆவியான வர் நம்மை உருமாற்றுகிறார்.

தேவனுடைய வார்த்தையாகிய கண்ணாடியில் நாம் இன்னும் அதிகமாய் உற்றுநோக்கி பார்க்க பார்க்க, அந்தக் கண்ணாடியில் வெளிப்படுகிற கர்த்தருடைய மகிமையை நாம் இன்னும் இன்னும் அதிகமாய் உற்றுநோக்கிப் பார்த்துக் கொண்டே இருக்கிறோம். இயேசுவின் மகிமையை நாம் அதிகமாய் உற்றுநோக்கிப் பார்த்துக் கொண்டே இருக்கும்போது, அவரைப் போலவே பரிசுத்த ஆவியானவரால் நாம் இன்னும் இன்னும் அதிகமாக மறுரூபமாக்கப்பட்டுக் கொண்டே போகிறோம்.

இருந்தாலும், ஒரு முக்கியமான உண்மையை நாம் நம் மனதில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தையாகிய கண்ணாடியில் பார்க்கும்போது மட்டுமே, ஆவியானவர் நம்மை உருமாற்றுகிறார். கண்ணாடியை விட்டு நம் கண்களை நாம் எடுத்து விடும்போது, மனுஷனுடைய ஞானம், மனுஷ கோட்பாடுகள் மற்றும் தத்துவங்கள் அல்லது மனுஷனுடைய இறையியலின் மீது நம் கவனத்தைத் திருப்பும்போது, ஆவியானவரால் இனி நமக்குள் வேலை செய்ய முடியாது.

விசுவாசத்தோடு தேவனுடைய வார்த்தையை நாம் பார்க்கும்போது, பரிசுத்த ஆவியானவர் அங்கே வேலை செய்கிறார். நாம் எப்படியிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்றும், கிறிஸ்துவுக்குள் நாம் எந்த அளவிற்கு உருமாற முடியும் என்றும் வெளிப்படுத்தும்படி நாம் தேவனுடைய வார்த்தைக்கு இடம் கொடுக்கும்போது, அவர் நமக்குள் கிரியை செய்கிறார். இதை நாம் செய்யும்போது, நாம் தொடர்ந்து மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபமாக்கப்படுகிறோம். தேவனுடைய ஆவியானவர், நம்முடைய இருதயங்களிலும், நம் வாழ்க்கையிலும் தீவிரமாய் அசைவாடி கிரியை செய்கிறார். தேவனுடைய வார்த்தையாகிய கண்ணாடியில் நாம் பார்த்துக் கொண்டேயிருக்கிற அந்தச் சாயலாகத்தானே அவர் நம்மை உருமாற்றுகிறார்.

நீங்கள் இதைப் பார்க்க விரும்புகிறீர்களா ?

இந்தப் போதனையிலுள்ள சத்தியங்களை நீங்கள் வாசிக்கின்ற இந்த நேரத்தில், அநேகமாக உங்களுடைய இருதயத்தில் ஏக்கத்தோடு கூடிய ஒரு வாஞ்சை வளர ஆரம்பித்திருக்கும். "இது எனக்கு நடக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்! என்னைக் குறித்த வித்தியாசமான ஒரு நல்ல படத்தை நான் பார்க்க விரும்புகிறேன்," என்று உங்களுக்குள்ளேயிருந்து ஒன்று சொல்வதை நீங்கள் கேட்பீர்கள்.

உங்களுடைய அணுகுமுறையில் ஒரு மாற்றத்தை உண்டாக்க, உங்களுக்கு உதவி செய்யும்படி கர்த்தரிடம் நீங்கள் ஜெபிக்க விரும்புகிறீர்களா? இது உங்களுடைய விருப்பமாக இருக்குமென்றால், பின் வரும் வார்த்தைகளை என்னோடு சேர்ந்து சொல்லி, தயவு செய்து ஜெபியுங்கள்.

"கர்த்தாவே, தேவனுடைய வார்த்தையாகிய கண்ணாடி என்னுடைய வாழ்க்கையில் வேலை செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இப்பொழுது நான் உம்முடைய வார்த்தையை ஆராயும்படியும், உம்முடைய வார்த்தை என்னை ஆராயும்படி இடம் கொடுக்கவும் நான் என்னை அர்ப்பணிக்கின்றேன். உம்முடைய மதிப்பீட்டை நான் பெற்றுக் கொள்வேன். அதிலிருந்து, எவை மாற்றப்பட வேண்டும், எவை ஒழுங்கு

If you receive more than one newsletter please do drop us a mail at *secretary@derekprince.in* or call us on *9585538202* and let us know the addresses and names on which you are receiving multiple copies

ALERT !!

PLEASE DO LET US KNOW WHEN YOU SHIFT OUT OF YOUR CURRENT CONTACT ADDRESS

இன்னும் தேவையா ?

- ஆம், இந்த இலவச இதழில் எனக்கு இன்னும்------பிரதிகள் தேவை.
- தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்.
- முதல் முறையாக பெறுகிறேன், இனி தொடர்ந்து எனக்கு அனுப்பவும்

See over for address details...

பதிவு செய்க !

- தயவுசெய்து டெரிக் பிரின்ஸ் - இந்தியா ஊழியங்களைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.
- ஈமெயில் மூலமாக அனுப்பவும்.
- கடிதம் மூலமாக அனுப்பவும்

ISSUE #009

செய்யப்பட வேண்டும் என்பதை நான் பார்த்து, அதை சரி செய்ய வேண்டிய நடவடிக்கைகளை நான் எடுப்பேன். நான் அதை ஏற்றுக் கொள்கிறேன், தர்க்கம் செய்ய மாட்டேன். நீர் எனக்குக் காண்பிப்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். உம்முடைய வாக்குத்தத்தங்களை நான் பெற்றுக் கொள்வேன். எனக்கென்று நீர் முன் ஆயத்தமாய் செய்து வைத்திருக்கிற நன்மைகளை நான் சுதந்தரித்துக் கொள்வேன்.

கர்த்தாவே, உமக்கு நன்றி. உம்முடைய வார்த்தையினாலும், உம்முடைய பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலும் என்னை மாற்றும்படி நீர் வைத்திருக்கிற திட்டத்திற்காக, உமக்கு நன்றி சொல்கிறேன். மெய்யாகவே நான் யார் என்பதை இயேசுவின் மூலம் நான் பார்க்கும்போது, அவருடைய மகிமையான சாயலைப் போலவே நானும் மறுரூபமாக்கப்பட வேண்டும் என்று ஏக்கத்தோடு வாஞ்சிக்கிறேன். கர்த்தாவே, உமக்கு நன்றி. உம்முடைய வார்த்தையாகிய கண்ணாடியின் மூலமாகவும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் மூலமாகவும் நீர் இதை என் வாழ்க்கையில் சாத்தியமாக்கியிருக்கிறீர். உமக்கு நன்றி.

ஆமென்.”"

TAKEN FROM THE DEREK PRINCE LEGACY RADIO SERIES

“WHAT GOD’S WORD WILL DO FOR YOU.” - Part 6 of 6

ஆவியானவரின் கனியை பறைசாற்றி அறிக்கை செய்தல்

விசுவாசத்தினால் கிறிஸ்து என் இருதயத்தில் வாசம் பண்ணும்படி, கர்த்தர் தம்முடைய மகிமையான ஐசுவரியங்களைக் கொண்டும், எனக்குள் இருக்கிற பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைக் கொண்டும் என்னைப் பெலப்படுத்துவாராக.

நான் ஆவியானவரின் நடத்துதலின்படி வாழ்கின்றேன். பாவ சுபாவத்தின் இச்சைகளைத் திருப்திப்படுத்தும்படி நான் நடக்க மாட்டேன். நான் ஆவியானவரால் நடத்தப்படுகிறேன். ஆகையால் நான் நியாயப்பிரமாணத்தின் கீழ் இல்லை.

ஆவியானவரின் கனி, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம் (உண்மை), சாந்தம், இச்சையடக்கம். இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.

நான் கிறிஸ்து இயேசுவுக்குச் சொந்தமானவனாய் இருக்கிறபடியால், நான் பாவ சுபாவத்தையும் அதன் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறேன்.

ஆவியானவரைப் பிரியப்படுத்தும்படி நான் விதைக்கிறபடியால், ஆவியானவரிடமிருந்து நித்திய ஜீவனை நான் அறுவடை செய்து கொள்வேன்.

ஆமென்.

உங்கள் விபரம்

NAME: MR / MRS / MISS ....

ADDRESS: ....

....

CITY: .... POSTCODE: ....

EMAIL: ....

இந்த இதழ் முற்றிலும் இலவசமானது. ஆனால் செலவுகளை சந்திக்க நீங்கள் உதவலாம்.

நன்கொடை: ₹

Derek Prince
Ministries - India

Contact us
www.derekprince.in
admin@derekprince.in
Ph 9585538205
1-C EVR Road,
3rd Floor,(Opp.
Chinthamani Mall),
Puthur, Trichy - 620017